Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, DECEMBER 15, 2023

வெள்ளிக்கிழமை டிசம்பர் 15, 2023 | ஒளி: 09 கதிர் 150 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# முட்டை இறக்குமதி அதிகரிப்பு



சதொச நிறுவனத்திற்கு இறக்குமதி செய்யப்படும் முட்டையின் எண்ணிக்கை புதன்கிழமை (13) முதல் 20 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிறி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### பதில் பொலிஸ்மா அதிபருக்கு எதிராக

# ஒழுக்காற்று நடவடிக்கை



**மனுதாரருக்கு 5 இலட்சம் ரூபாய் நஷ்டஈடாக வழங்குமாறு உத்தரவு**

**தடுத்துவைத்து சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதன் மூலம் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டது**

நபரொருவரை கைது செய்து அவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டு தொடர்பில், பதில் பொலிஸ்மா அதிபரான தேசபந்து தென்னகோன், அந்நபரின் அடிப்படை உரிமையை மீறியுள்ளார் என தீர்மானித்த உயர்நீதிமன்றம், மனுதாரருக்கு 5 இலட்சம் ரூபாய் நஷ்டஈடாக வழங்குமாறு, பதில் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட மூவருக்கு உத்தரவிட்டுள்ளது.

ஒரு தனிநபரின் அடிப்படை உரிமைகளை மீறியதற்காக அவர்களின் தனிப்பட்ட நிதியில் இருந்து நஷ்டஈட்டை வழங்குமாறு, உயர்நீதிமன்றம், வியாழக்கிழமை (14) உத்தரவிட்டுள்ளது.

நீதியரசர்களான குமுதினி விக்ரமசிங்க, பிரியந்த பெர்னாண்டோ ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் நீதியரசர் எஸ்.துரைராஜா இந்த தீர்ப்பை வழங்கினார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், மிரிஹான பொலிஸ் நிலையத்தில் 2010ஆம் ஆண்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது, அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# காஸ் விலையும் எகிறும்




எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் எரிவாயுவின் விலையை கணிசமாக உயர்த்த வேண்டிய தேவை உள்ளது என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இது குறித்து லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் குறிப்பிடுகையில்,

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வற் வரி 18 சதவீதமாக அதிகரிக்கப்படவுள்ள நிலையில், எரிவாயுவின் விலையை அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

அதேசமயம், வரி அதிகரிப்பின் காரணமாக இந்த தீர்மானத்தை தயக்கத்துடன் எடுக்க நேரிட்டது என தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கா வரவேற்பு

இலங்கையின் முதலாவது விரிவாக்கப்பட்ட நிதி வசதி மீளாய்வுக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் அனுமதியை அமெரிக்கா வரவேற்றுள்ளது.



இதனடிப்படையில், பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைகளுக்கு ஆதரவாக இலங்கைக்கு சுமார் 337 மில்லியன் டொலர்கள் கிடைக்கும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இந்த முக்கியமான நடவடிக்கை மூலம் நாட்டின் நீடித்த சீர்திருத்தங்களின் தொடர்ச்சியான முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது என்று அவர் கூறியுள்ளார்.

# “தெற்குக்கு கொண்டுவந்த வடக்கு தங்கங்கள் எங்கே”?



“2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த நிலையில் வன்னி பகுதியில் இருந்து எமது தேசத்தின் அரசு ஆட்சிசெய்த பகுதியில் இருந்து பல கோடி ரூபாய் பெறுமதியான தங்கங்கள் அப்போதைய அரசினால் மீட்கப்பட்டு தென்பகுதிக்கு கொண்டுவரப்பட்டன. அந்த தங்கங்கள் எங்கே?” என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி.யான செல்வராசா கஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (13) இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்கான செலவுத் தலைப்பு மீதான இறுதிநாள் விவாதத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2

# தமிழக மீனவர்கள் அறுவருக்கும் விளக்கமறியல்



எம்.றொசாந்த்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 6 தமிழக கடற்றொழிலாளர்களையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# இமாலய பிரகடனம் மஹிந்தவிடம் கையளிப்பு



இமாலய பிரகடனத்தை உலகத் தமிழ் பேரவை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளது.

உலகத் தமிழ் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் உள்ளிட்ட பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவினர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடினர். இதன் பின்னர் இமாலய பிரகடனத்தைக் குறித்த குழுவினர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தனர்.

இந்த சந்திப்பு உலகத் தமிழ் பேரவையின் வேண்டுகோளுக்கு இணங்க முன்னெடுக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 600 நாட்களுக்கு பின் கவிஞர் விடுவிப்பு



தீவிரவாதத்தை வளர்த்ததாகக் கூறி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, சுமார் 600 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், பிணையில் விடுவிக்கப்பட்ட பிரபல கவிஞரை விடுதலை செய்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# புத்தக பைக்குள் இருந்த பாம்பு

அஸ்ஹர் இப்றாஹிம்



ஹிங்குராக்கொடை புறநகர் பாடசாலையொன்றில் 8ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவரின் புத்தகப் பையில் கடும் விஷமான பாம்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஹிகுராக்கொட கல்வி வலயத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வழக்கம் போல், காலையில் பாடசாலைக்கு வந்த மாணவி, தன்னுடைய புத்தகப் பையில் இருந்து, புத்தகத்தை எடுக்க முற்பட்டபோது, ஏதோவொன்று நெளிந்துள்ளது. நொளு நொளுவென இருந்துள்ளது.

பையை நன்றாக விரித்துப் பார்த்தபோது, அதில், பாம்பு இருப்பதைக் கண்ட சிறுமி அலறியடித்ததை அடுத்து, ஆசிரியைகள், பாம்புடன்

தொடர்ச்சி P2

# தாயுடன் வந்த மகள் ஓட்டோவில் கடத்தல்

பிரத்தியேக வகுப்பை முடித்துக்கொண்டு தனது தாயாருடன் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த 17 வயது மாணவியை, காதலன் எனக்கூறிய இளைஞன் கடத்திச் சென்றுள்ளார்.

தொடர்ச்சி P2



### இந்நாடு சிங்கள நாடல்ல, தமிழ்நாடுமல்ல

# பன்மைத்துவ நாடு என்பது ஆரம்ப புள்ளியாக வேண்டும்

தேரர்களிடமும், உலகதமிழர் பேரவையிடமும் மனோ கணேசன்

இலங்கை என்ற எம் தாய்நாடு, ஒரு “சிங்கள பௌத்த நாடு” என்ற தமக்கு மட்டுமே என்ற சிந்தனை மறைய வேண்டும். இந்நாட்டின் இன்னொரு பிரதேசத்தில் இது தமிழருக்கு மட்டுமேயான “தனித் தமிழ்நாடு” என்ற சிந்தனையும் மறைய வேண்டும்.

தொடர்ச்சி P2

# ஜப்பான் ரயில் குறித்து பேச்சு ஆரம்பம்



இலகு ரயில் திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பாக ஜப்பான் அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் இன்னும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இந்த திட்டம் விரைவில் மீண்டும் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசுக்கும் ஜப்பான் அரசுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இத்திட்டத்தை மீள் மதிப்பீடு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ஜனாதிபதி–தமிழ் எம்.பி.க்களுக்கு இடையிலான சந்திப்பு ஒத்திவைப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் எம்.பி.க்களுடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் புதன்கிழமை (13) நடத்த விருந்த சந்திப்பு திகதி குறிப்பிடப்படாது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஒழுக்காற்று நடவடிக்கை



பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள், சட்டவிரோதமாகக் கைது செய்து, தடுத்துவைத்து, சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதன் மூலம், தனது அடிப்படை உரிமை மீறப்பட்டதாக, மனுதாரரான டபிள்யூ. ரஞ்சித் சுமங்கல தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

தேசபந்து தென்னகோனின் மேற்பார்வையின் கீழ் இருந்த மிரிஹான பொலிஸ் நிலையத்தில் வைத்தே மனுதாரரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தேசபந்து தென்னகோன் உட்பட, சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழு உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உயர் நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி சரிதா டி பொன்சேகா மற்றும் திலினி விதானகமகே ஆகியோருடன் சிரேஷ்ட சட்டத்தரணி விரான் கொரியாவும் பதில் பொலிஸ்மா அதிபர் தென்னகோன் மற்றும் சட்டமா அதிபர் சார்பில் அரச சிரேஷ்ட சட்டத்தரணி இந்துனி புஞ்சிஹேவாவும் ஆஜராகியிருந்தனர்.

# முட்டை இறக்குமதி அதிகரிப்பு



கிறிஸ்மஸ் காலப்பகுதியில் உள்ளூர் முட்டை விலை அதிகரிப்பு மற்றும் மக்களுக்குத் தேவையான முட்டைகளைக் கட்டுப்படுத்துவதற்காக சதொச நிறுவனத்திற்கு இதுவரை தலா 10 இலட்சம் முட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்தியாவில் இருந்து இம்மாதம் 300 இலட்சம் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அரச வர்த்தக கூட்டுத்தாபனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளதாகவும் 100 இலட்சம் முட்டைகள் செவ்வாய்க்கிழமை (12) பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# புத்தக பைக்குள் இருந்த பாம்பு



இருந்த புத்தகப் பையை வகுப்பறையில் இருந்து எடுத்துச் சென்று பாம்பைக் காட்டுக்குள் விடுவித்துள்ளனர்.

சிறுமியின் வீட்டில் புத்தகப் பைக்குள் பாம்பு ஊர்ந்து சென்றிருக்கலாம் எனவும் நொடிப்பொழுதில் அந்தச் சிறுமி பாம்புக் கடியில் இருந்து உயிர் பிழைத்திருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

# “தெற்குக்கு கொண்டுவந்த வடக்கு தங்கங்கள் எங்கே”?



மேலும் அவர், “2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த நிலையில் வன்னி பகுதியில் இருந்து எமது தேசத்தின் அரசு ஆட்சி செய்த பகுதியில் இருந்து பல கோடி ரூபாய் பெறுமதியான தங்கங்கள் மீட்கப்பட்டு அவை கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டன. தமிழீழ வைப்பகத்தில் அடகு வைக்கப்பட்டிருந்த மற்றும் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த தங்கங்கள் பாதுகாப்பான முறையில் உரியவர்களின் பெயர் மற்றும் முகவரி குறிக்கப்பட்டு, பாதுகாப்பாக பொதியிடப்பட்டிருந்ததாக அரசாங்கம் அப்போது அறிவித்திருந்தது.

இவ்வாறு அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் தமக்கு மீளவும் கிடைக்கும் என தமிழ் மக்கள் காத்திருக்கிறார்கள். ஆனால் இன்று வரை உரியவர்களுக்கு அந்த தங்கம் கையளிக்கப்படவில்லை. கைப்பற்றப்பட்ட தங்கங்களுக்கு என்ன நடந்தது ?.ஏன் உரியவர்களிடம் அவை கையளிக்கப்படவில்லை?. உரியவர்களிடம் அவர்களின் நகைகள் ஒப்படைக்கப்பட வேண்டும்” என்றார்.



# பன்மைத்துவ நாடு என்பது ஆரம்ப புள்ளியாக வேண்டும்

சகலருக்கும் சொந்தமான, இலங்கை ஒரு பன்மைத்துவ நாடு என்ற அடிப்படையே உங்கள் நடவடிக்கைக்கு ஆரம்பப் புள்ளியாக இருக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

என பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற, சிறந்த இலங்கைக்கான சங்க (பௌத்த) மன்றம், உலகத் தமிழர் பேரவை ஆகிய அமைப்புகளுடனான சந்திப்பிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

“76 விகிதம் சீனர்களைக் கொண்ட சிங்கப்பூர், அரசியல் சட்டப்படி தம்நாட்டு பன்மைத்துவத்தைக் கொண்டாட முடியும் என்றால், ஏன் இலங்கையில் எம்மால் அதைக் கொண்டாட முடியாது?” என்ற கேள்வியை முயற்சியில் ஈடுபடும் தேரர்களை நோக்கி நான் கேள்வி எழுப்பவில்லை. ஏனெனில் இம்முயற்சி வெற்றி பெறுவது பெருமளவில் அவர்கள் தரப்பில்தான் உள்ளது என்பது எனது அபிப்பிராயம். முதலிலேயே அவர்களை தளர்வடையச்செய்ய நான் விரும்பவில்லை. ஆனால், அடுத்த முறை இதை நான் கேட்பேன். இத்தகைய கேள்விகளை ஏற்கனவே பாராளுமன்றத்திலும், உள்நாட்டு மேடைகளிலும் நான் பலமுறை எழுப்பியுள்ளேன் என்றார்.

> **76 விகிதம் சீனர்களைக் கொண்ட சிங்கப்பூர், அரசியல் சட்டப்படி தம்நாட்டு பன்மைத்துவத்தைக் கொண்டாட முடியும் என்றால், ஏன் இலங்கையில் எம்மால் அதைக் கொண்டாட முடியாது?” என்ற கேள்வியை முயற்சியில் ஈடுபடும் தேரர்களை நோக்கி நான் கேள்வி எழுப்பவில்லை**

# ஜப்பான் ரயில் குறித்து பேச்சு ஆரம்பம்

இதற்குக் காரணம், கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, இதற்காக செலவிடப்பட்ட தொகை முதல் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது.

எவ்வாறாயினும், இலங்கை அரசு மற்றும் ஜப்பான் அரசுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி அடுத்த வருடத்தில் பொது வசதிகள் இடமாற்றம் மற்றும் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மீண்டும் செயற்படுத்தப்படும் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலகு ரயில் திட்டத்திற்கான ஆரம்ப சாத்தியக்கூறு ஆய்வு நடத்தப்பட்டது. மாலபே முதல் கோட்டை வரையிலான கட்டுமானம் தொடர்பான விரிவான திட்டங்கள், ஒப்பந்த ஆவணங்கள், ஏல ஆவணங்கள் மதிப்பீடுகள் மற்றும் கண்காணிப்பு சேவைகளை வழங்க சர்வதேச ஆலோசனை நிறுவனம் ஒன்று நியமிக்கப்பட்டதுடன் அதன் அடிப்படை விஷயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 120 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

இந்த பூர்வாங்க பணிகள் 2019 ஏப்ரலில் தொடங்கி 91 மாதங்களில் முடிக்கப்பட இருந்தது. இருப்பினும், 21 மாதங்களுக்குப் பிறகு, அதாவது டிசெம்பர் 31,2020க்குப் பிறகு திட்டத்தை இரத்து செய்ய அரசாங்கம் முடிவு செய்தது. இந்த ஆலோசனைகள் நிறுத்தப்பட்டபோது, திட்டத்தின் அடிப்படைத் திட்டங்கள் 60% மற்றும் விரிவான திட்டங்கள் 78% நிறைவடைந்தன. மாலபே வரை மண் பரிசோதனை மற்றும் முன் சாத்தியக்கூறு ஆய்வுகள் நிறைவடைந்துள்ளன.

இத்திட்டத்திற்கான காணி கையகப்படுத்தும் பணியும் தொடங்கியுள்ளது, இதற்காக அடையாளம் காணப்பட்ட காணியின் அளவு 22 ஹெக்டயர் ஆகும். பெரும்பாலான காணி கையகப்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. ஆனால் இதுவரை கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை.

இலகுரக ரயில் சேவை இரத்து செய்யப்பட்டதால், ஆலோசனை சேவைகளுக்காக நியமிக்கப்பட்ட நிறுவனம் கோரிய சேதங்களை ஆய்வு செய்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முடிவு செய்ய, அமைச்சரவை பேச்சுவார்த்தை குழுவை நியமித்துள்ளது. இதற்கிடையில், JICA நிறுவனம் பெற்ற கடன் தொகையில் இருந்து திட்டத்திற்காக செலுத்த ஒப்புக்கொண்டது. ஆனால், கடன் செயல்படுத்தப்படாததால் பணம் செலுத்தப்படவில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.



# ஜனாதிபதி–தமிழ் எம்.பி.க்களுக்கு இடையிலான சந்திப்பு ஒத்திவைப்பு

வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் எம்.பிக்களுடன் நல்லிணக்கம் குறித்துக் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி விரும்புவதாகவும் அதற்கான சந்திப்பு 13ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பாராளுமன்றக் கட்டிடத்தொகுதியில் இடம்பெறுமெனவும் அதில் பங்கேற்குமாறும் தெரிவித்து வடக்கு,கிழக்கு மாகாண தமிழ் எம். பிக்களுக்கு ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவனினால் 11ஆம் திகதியிடப்பட்டு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.

2024 வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு புதன்கிழமை (13) மாலை 6 மணிக்கு நடைபெறவிருந்த நிலையில், மாலை 3 மணிக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் எம். பிக்களை பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் ஜனாதிபதி சந்தித்துப் பேசவிருந்தனர்.

இந்நிலையில் இந்த சந்திப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்படுவதாகவும் பிறிதொரு தினத்தில் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்படுமெனவும் மீண்டும் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவனினால் தமிழ் எம். பிக்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# தாயுடன் வந்த மகள் ஓட்டோவில் கடத்தல்

இந்த சம்பவம் மத்துகம பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளதுடன், பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மாணவி ஹொரணை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வருகின்றார்.

இந்நிலையில் தனது 44 வயதுடைய தாயுடன் மத்துகம பிரதேசத்தில் உள்ள தனியார் வகுப்பிலிருந்து, வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது காதலன் எனக்கூறிய சந்தேக நபர், மற்றுமொரு நபருடன் முச்சக்கரவண்டியில் வந்துள்ளதாகத் தாயார் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் மகளின் கையை இழுத்து முச்சக்கரவண்டியில் ஏற்றிக் கடத்தி சென்றுவிட்டனர் என்றும் முறைப்பாட்டில் தாயார் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பிள்ளையின் தாயும் முச்சக்கரவண்டியில் ஏற முற்பட்டதாகவும், சந்தேகநபர்கள், அந்த தாயைத் தாக்கி உதைத்துவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களும், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டியும் அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்துடன், சந்தேகநபர்கள் மற்றும் கடத்தப்பட்ட யுவதியைக் கண்டுபிடிக்க விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# 600 நாட்களுக்கு பின் கவிஞர் விடுவிப்பு



தமிழ் சமூகத்தின் மத்தியில் மன்னாரமுது அஹ்னாப் என அழைக்கப்படும் அஹ்னாப் ஜசீமை விடுதலை செய்யும் உத்தரவு புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி நதீ அபர்ணா சுவந்துரு கொடவினால் செவ்வாய்க்கிழமை (12) வெளியிடப்பட்டதாக தெரிவிக்கின்றனர்.

அஹ்னாப் ஜசீம் சட்டத்தால் குற்றவாளி இல்லையென அறிவிக்கப்பட்டாலும், அவர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதை அரசு உத்தியோகப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளமையால் அவர், மிகுந்த சிரமத்துடன் தன் வாழ்வாதாரத்தைப் பராமரிக்க வேண்டியுள்ளது.

2017இல் வெளியிடப்பட்ட கவிதைத் தொகுப்பான நவரசத்தை எழுதியமை மற்றும் அவர் தனது மாணவர்களை ‘தீவிரவாத சித்தாந்தங்களை’ பின்பற்றும் நோக்கத்துடன் ‘தீவிரவாத’ விடயங்களைப் போதித்தார் என்ற குற்றச்சாட்டில் கடந்த 2020 மே 16ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து அஹ்னாப் ஜஸீம் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி சர்வதேச மனித உரிமைகள் எதிர்ப்பையும் மீறி 579 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னரும், அஹ்னாப் ஜசிம், 2023 ஜூன் 8, அன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்னவினால் வெளியிடப்பட்ட 2335/16 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபராக அவர் பெயரிடப்பட்டார்.

டிசம்பர் 12 அன்று, சட்டமா அதிபர் திணைக்களம் அஹ்னாப் ஜசிமுக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்க நான்கு மாணவர்களையும் ஒரு அதிபரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியது, ஆனால் அவர்கள் சமர்ப்பித்த ஆதாரங்கள் குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதாக இல்லை எனக் கூறி அஹ்னாப் ஜசிமை விடுவிக்க நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

சட்டத்தரணி சஞ்சய் வில்சன் குணசேகர தலைமையிலான சட்டத்தரணிகள் குழு மன்றில் மன்னார்முது அஹ்னாப் சார்பாக முன்னிலையானது.

அஹ்னாப் ஜசிம் பயங்கரவாதச் சட்டங்களைப் பயன்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டபோது, பல சர்வதேச அமைப்புகள் அவரை விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக மீனவர்கள் அறுவருக்கும் விளக்கமறியல்

காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் சுற்றுக்காவல் (ரோந்து) நடவடிக்கையில் புதன்கிழமை (13) ஈடுபட்டு இருந்த போது இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கால்நடைகளை கொல்லுவோருக்கு வலை





கனகராசா சரவணன்

மட்டு. மேச்சல் தரை மயலத்தமடு மாதவனை பிரதேசத்தில் கால்நடைகள் தொடர்ந்து திருடி கொலை செய்பவர்களைத் தேடி மேச்சல் தரை பகுதியை 50 பேர் கொண்ட பொலிஸ் குழுவினர் விசேட தேடல் நடவடிக்கை ஒன்றை புதன்கிழமை (13) முன்னெடுத்துள்ளனர்.

குறித்த பகுதியில் கால்நடைகள் திட்டமிட்டு துப்பாக்கியால் சுட்டும், மின்சார வேலிகள், மற்றும் வாய்வெடி, வாளால் வெட்டியும் சுமார் 100 க்கு மேற்பட்ட கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளன.

தினமும் ஒன்றுக்கு ஒரு கால்நடை என்ற வீதத்தில் கால்நடைகள் கொல்லப்பட்டு வருவதாகப் பண்ணையாளர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில், 50க்கும் மேற்பட்ட பொலிஸ் விசேட குழுவினர் 5 பிரிவுகளாகப் பிரிந்து புதன்கிழமை காலை 6 மணியிலிருந்து மேச்சல்தரை பகுதிக்குள் நுழைந்து மாலை 6 மணிவரை விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது 3 கால்நடைகள் எந்தவிதமாக காயங்களும் இல்லாமல் உயிரிழந்த நிலையல், மீட்கப்பட்டதாகவும் அந்த பகுதியில் அனுமதி பெற்று சேனைபயிர் செய்கையில் ஈடுபட்டுவரும் 3 பேரை விசாரணைக்காக அழைத்து வந்து விசாரணையின் பின்னர் விடுவித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கடலட்டை பிடித்த 07 பேர் கைது

ஸ்.றொசேரியன் லெம்பேட்



சிலாவத்துறை கடற்பரப்பில் சட்டவிரோதமாகக் கடலட்டை பிடித்த 07 பேர் கடற்படையினரால் புதன்கிழமை (13) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாவத்துறை கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, சிலாவத்துறை கடல் பகுதியில் இரவு, சட்டவிரோதமான முறையில் நீரில் மூழ்கி கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த நிலையில், 07 பேரைக் கடற்படையினர் கைது செய்துள்ளதுடன், 02 படகுகள், டைவிங் கருவிகள் மற்றும் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட சுமார் 874 கடல் அட்டைகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னாரைச் சேர்ந்த 22 வயதுக்கும் 48 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் குறித்த 07 பேரும், அவர்களின் உடைமைகள் மற்றும் கடல் அட்டைகள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறை கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



# தீயினால் கருகியது கடை

எம்.றொசாந்த்

மீசாலை - இராமவில் பகுதியில் உள்ள கடை கட்டடத்தில் புதன்கிழமை (13) இரவு ஏற்பட்ட மின்னொழுக்கு காரணமாக கடை எரிந்து நாசமாகியுள்ளது.

சம்பவத்தை கேள்வியுற்று ஸ்தலத்துக்கு விரைந்த தீயணைப்பு படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

கடையில் இருந்த பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளதுடன், அப்பகுதிக்கான மின் விநியோகமும் சுமார் ஒரு மணி நேரம் தடைப்பட்டு இருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் கொடிகாம பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# நடிகை ரம்பா யாழுக்கு விஜயம்

தென்னிந்திய நடிகை ரம்பா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார். அவர், தனது குடும்பத்துடன் மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோவிலில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நடிகை ரம்பாவின் கணவர் இந்திரகுமார் பத்மநாதன், யாழ்ப்பாணம் மானிப்பாயை பூர்வீகமாகக் கொண்ட கனடா முதலீட்டாளராவார்.

இவரின் முயற்சியாக யாழ்ப்பாணத்தில் நொதேர்ன் யுனி (Nothern uni) தனியார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நொதேர்ன் யுனியின் அனுசரணையில், தென்னிந்தியப் பாடகர் ஹரிஹரன் பங்கேற்கவுள்ள பிரம்மாண்டமான இசை நிகழ்ச்சி யாழ்ப்பாணம் முற்றவெளியில் எதிர்வரும் 21ம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எம்.றொசாந்த்

# ஒன்றை சில்லில் சாகசம் செய்தவருக்கு தண்டம்

அஸ்ஹர் இப்றாஹீம்



நிட்டம்புவ, அத்தனகல்ல பிரதான வீதியில், மோட்டார் சைக்கிளின் முன் சில்லை, சைக்கிளில் அமர்ந்திருந்தவாறு தூக்கிக் கொண்டு பின் சில்லால் மட்டுமே மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞரொருவர் நிட்டம்புவ போக்குவரத்து பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞன் அத்தனகல்ல நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது நீதவான், குறித்த இளைஞனை எச்சரித்து தண்டப்பணமாக 60,000 ரூபாய் செலுத்துமாறும் கட்டளையிட்டுள்ளார்.

## மட்டக்களப்பு மாவட்டத்துக்கு

# புதிய அரசாங்க அதிபர் நியமனம்



மட்டக்களப்பு மாவட்டத்திற்கான புதிய அரசாங்க அதிபராக முரளிதரன் வியாழக்கிழமை (14) நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை தரத்தின் விசேட தரத்தையுடைய ஒரு சிரேஷ்ட நிர்வாக அதிகாரியான இவர் கிழக்கு மாகாண சபையில் பல்வேறு நிர்வாக பதவிகளை வகித்திருந்ததோடு, இறுதியாகக் கிழக்கு மாகாண சபையின் சுகாதார சுதேச அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றியிருந்தார்.

குறித்த நியமனமானது கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவனேசத்துறை சந்திரகாந்தன் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கே.டி.என். ரஞ்சித் அசோக ஆகியோர் முன்னிலையில், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

# ஞாயிறன்று சிறப்பு பூஜை

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோகணேசனின் பிறந்த தின சிறப்பு பூஜை வழிபாடுகள், கொழும்பு ஆமர்வீதி பரடைஸ் பிளேஸ் அம்மன் கோவிலில் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தந்தை செல்வா நற்பணி மன்றத்தினால் நடத்தப்படவுள்ள இந்நிகழ்வுக்குரிய ஏற்பாடுகளை மன்றத்தின் தலைவர் ரவீந்திரன் ,பொதுச் செயலாளர் எஸ்.கே.தளையரட்ணம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

# திடீர் சுகயீனத்தால் பெண் உயிரிழப்பு

எம். றொசாந்த்



திடீரென சுகயீனமடைந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ம.துசிந்தினி (வயது 26), யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை வைத்தியசாலையில் கடந்த 11ஆம் திகதியன்று அனுமதிக்கப்பட்டார். அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் புதன்கிழமை (13) உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பெண் மூளைக் காய்ச்சல் ஏற்பட்ட காரணமாக உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

# எலிக்காய்ச்சலில் விவசாயி மரணம்

அஸ்ஹர் இப்றாஹீம்

மொனராகல - கொவிந்துபுர பிரதேசத்தை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 73 வயதுடைய களுவாகே றொபின் என்ற விவசாயி, எலிக்காய்ச்சலால் உயிரிழந்துள்ளார்.

வயல் நிலங்களில் வேலை செய்வோருக்கு ஏற்படக்கூடிய எலிக்காய்ச்சலால் இம்மாவட்டத்தில் மேலும் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.

மேற்படி விவசாயி, சியம்பலாண்டுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மொனராகல பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கம்பஹா மாநகர சபை

2024 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து 2024 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை, வாகனங்கள் நிறுத்தும் இடம், பொது மலசலக்கூடம் மற்றும் மத்திய பேருந்து நிலையத்தின் அலங்கார பூக்கடை விற்பனை மையம் ஆகியவற்றுக்கான விலைமனுக்கோரல்.

2024 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து 2024 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் வாகனங்கள் நிறுத்தும் இடம், பொது மலசலக்கூடம் மற்றும் மத்திய பேருந்து நிலையத்தின் மலர்கள் விற்பனை மையம் ஆகியவற்றுக்காக வர்த்தக உரிமையை குத்தகைக்கு விடுப்பதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு விண்ணப்பம் அதற்கான விலைமனு வைப்பு பணம் மற்றும் விலைமனு விண்ணப்பக் கட்டணம் ஆகியவற்றை செலுத்தி 2023.12.29 ஆம் திகதி வரை வேலை நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல 3.00 மணி வரை விலைமனு விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனு விண்ணப்பப் படிவங்கள் அசல் மற்றும் நகல் என தனித்தனி உறைகளில் இட்டு சீல் வைக்கப்பட்டு இரண்டு உறைகளையும் ஒரு உறையில் இட்டு அதன் பிறகு அதுவும் சீல் வைக்கப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “சபை வளாக விலைமனுக்கோரல் - 2024” என தெளிவாகக் குறிப்பிடப்பட்டு 2024.01.01 ஆம் திகதி அன்று பிற்பகல் 02.00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு மாநகர ஆணையாளர், கம்பஹா மகாநகர சபை, கம்பஹா என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடவும்.

2024.01.01 ஆம் திகதி அன்று பிற்பகல் 02.00 மணிக்கு சீல் வைக்கப்பட்ட விலைமனு விண்ணப்ப படிவங்களை ஏற்றுக்கொள்வது முடிவடையும் மற்றும் முடிந்தவுடன் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனு கோருவோர் அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்ட பிரதிநிதி அந்த நேரத்தில் பங்குபற்ற முடியும்.

தெரிவுச் செய்யப்பட்ட விலைமனுகாரர்களின் விலைமனு ஏற்றுக்கொள்ளப்பட்டது என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதன் பின்னர் 7 நாட்களுக்குள் 4 மாதங்களுக்கான விலைமனு கூலியுடன் அதற்கான முத்திரை வரியுடன் கூடிய அனைத்துடன் கூடிய வைப்பீட்டு பணத்தையும் ஒரே தடவையில் செலுத்தி ஒப்பந்தம் செய்யப்படவேண்டும். 04 மாதங்களுக்கான வைப்பீட்டு பணத்தை ஒரே தடவையில் செலுத்தமுடியாமல் போகும் விலைமனு கோருவோருக்கு விலைமனு வழங்கப்படமாட்டாது. மேலதிக விவரங்களை 033 – 4942296 அல்லது 033 - 4942297 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளமுடியும்.

| இல | இடம் தொடர்பிலான விவரம் | விலைமனு கோரல் விண்ணப்பக் கட்டணம் | விலைமனு வைப்பீட்டு பணம் ரூபாய் (மீளக் கையளிக்கப்படும்) | வருடாந்திர குறைந்தபட்ச ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவமனை அருகிலுள்ள கழிப்பறை | 1,000.00 | 2,700.00 | 135,000.00 |
| 2 | பிரதான வாகன நிறுத்துமிடம் | 1,000.00 | 24,600.00 | 1,230,000.00 |
| 3 | மருத்துவமனை அருகே வாகன நிறுத்துமிடம்-(1) | 1,000.00 | 34,600.00 | 1,730,000.00 |
| 4 | மருத்துவமனை அருகே வாகன நிறுத்துமிடம் (மீற்றர் 42 பிரிவு)-(2) | 1,000.00 | 7,200.00 | 360,000.00 |
| 5 | மத்திய பேருந்து நிலையத்தின் அலங்கார பூக்கடை மையம் | 1,000.00 | 3,990.00 | 199,500.00 |

**உங்களால் சமர்ப்பிக்கப்படும் டெண்டர் தொகைக்கான முத்திரை வரி கட்டணம் மற்றும் தண்ணீர் ஃ மின்சாரத்திற்கான முழுக் கட்டணங்களும் வசூலிக்கப்படும்.**

2023.12.14

லோச்சனா பாலசூரியா
நகராட்சி ஆணையர் மற்றும் அதிகாரங்கள்,
செயல்பாடுகள், நிர்வாக அதிகாரி, மாநகர சபை,
கம்பஹா

# மிகவும் ஏழ்மையான சில தாய்மார்களின் கடைசி 'விற்பனை'

பிறந்து ஏழு நாட்களேயான இரண்டு ஆண் இரட்டை சிசுக்களைப் பணத்துக்கு விற்கப்பட்ட சம்பவம் தொடர்பில், அக்குழந்தைகளின் தாய் மற்றும், இரண்டு சிசுக்களையும் பணத்துக்கு வாங்கிய இரண்டு பெண்கள், கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு சிசுக்களும் தலா இருபத்தைந்து ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டுள்ளார். என்பதை நினைத்துக்கூட பார்க்கமுடியாதுள்ளது.

நகரத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராமங்களில் இதுபோன்ற குழந்தைகள் விற்கப்படும் சம்பவங்கள் அவ்வப்போது பதிவாகி வந்தன. கிராமத்தின் பொருளாதாரத்தில் ஏற்படும் குழப்பங்களுக்கு மத்தியில் மிகவும் ஏழ்மையான சில தாய்மார்களின் கடைசி 'விற்பனை' அவர்களின் வயிற்றில் பிறந்த குழந்தை என்பது உண்மையான சோகம்.

முக்கிய நகரமான பிலியந்தலையிலிருந்து. பணம் கொடுத்து சிசுவொன்றை வாங்கியதாகக் கூறப்படும் பெண், ராகம பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றைய சிசு, களனி பிரதேசத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. வயிற்றில் இருக்கும் குழந்தையை விற்றுப் பிழைப்பு நடத்த வேண்டும் என்ற பொருளாதார அழுத்தம் இப்போது நகரத்திலும் பரவி வருகிறது என்பதற்கு இதுவே சிறந்த உதாரணம்.

இச்சம்பவத்தில் ஈடுபட்ட இரு பெண்களும் குழந்தைகளின் தாயும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். ஆனால், இந்த பெண்களை பொலிஸார் கைது செய்து அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது இப்பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இந்நாட்டில் பெண்களும் சிசுக்களும் பொருளாதார நெருக்கடிக்குப் பலியாகி வருவது முக்கியப் பிரச்சினையாகும். அவர்கள் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்திருப்பதால், அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தவிர்க்க முடியாது. ஆனால், பிரச்சினை அதோடு நிற்கவில்லை.

நம் நாட்டின் சட்டப்படி, குழந்தைகளைத் தத்தெடுப்பதற்காக மற்றொரு தம்பதியரிடம் சட்டப்பூர்வமாக ஒப்படைக்கும் முறை உள்ளது. அத்தகைய தேவை உள்ள தாய்மார்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களும் ஆலோசனைகளும் வழங்கப்படுவதில்லை. இதற்குக் காரணம் ஏழ்மை மட்டுமின்றி கல்வியறிவின்மையும் தாய்மார்களை இதுபோன்ற சம்பவங்களுக்குத் தூண்டுகிறது. அத்தகைய தாய்மார்கள் நாட்டை சூழ்ந்துள்ள வறுமைக்கு எளிதில் பலியாகின்றனர்.

இந்நிலையில், நிறைவேற்றப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுக்கான நிதியொதுக்கீடு 51 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் ஹரிணி அமரசூரிய குற்றஞ்சாட்டினார்.

இந்த நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க போதுமான அரசியல் உறுதிப்பாடு இல்லை. தேர்தல் காலத்தில் பெண்கள், குழந்தைகளின் மேம்பாட்டுக்குப் பல வாக்குறுதிகள் அள்ளி வீசப்படுகின்றன. தேர்தல் சூடு தணிந்தவுடன், பெண்கள் மற்றும் குழந்தைகள் உரிமைக் குரல்களும் நசுக்கப்படுகின்றன.

இதில் அரசியலைச் சேர்ப்பதில் அர்த்தமில்லை. இந்நாட்டில் 51 வீதமான வாக்காளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்களின் உண்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவது காலத்தின் தேவை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்பவர்களேயே சமூகம் விரும்புகின்றது.

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப்போய் விடுவார்கள்.

நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனோ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

நன்றி -புருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வானரங்களால் அச்சம்

மட்டக்களப்பு காத்தான்குடி நகர சபை பிரிவில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பெரும் எண்ணிக்கையிலான குரங்குகள் கூட்டம் கூட்டமாக வீட்டுக் கூரைகளின் மேலால் ஏறிப்பாய்வதால் தற்போதைய பருவமழை காலத்தில் நனைந்து ஈரத்தன்மையுடன் காணப்படும் ஓடுகள் உடைந்து வீட்டின் உட்பகுதியில் விழுவதால் அதிக அச்சத்துடன் வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

> குரங்குகளின் அட்டகாசங்களை கட்டுப்படுத்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

அதேநேரம், பல்வேறு பயிர் வர்க்கங்களையும் கடித்து நாசமாக்கி வருவதாகவும் இதனால் குறைந்த வருமானம் பெறுவோர் மிகவும் பாதிப்படைந்துள்ளதாகவும் பிரதேச வாசிகள் குறிப்பிட்டுள்ளனர்.

குரங்குகளின் அட்டகாசங்களை கட்டுப்படுத்த மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- ரீ.எல்.ஜவ்பர்கான்



கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின் – 31:

# உலகின் முதல் பெண் பிரதமரும் வேர்விட்ட இனவாதமும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1959இல் பண்டாரநாயக்கவின் கொலை இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாதம் எவ்வாறு உள்முரண்பாடுகளால் ஊசலாடியது என்பதையும் அதன் பல்பரிமாணத் தன்மையையும் வெளிக்கொண்டுவந்தது. இனிமேலும் இலங்கையின் பௌத்த பிக்குகள் அனைத்தையும் துறந்த துறவிகள் அல்ல என்ற ஏற்கக் கடினமான உண்மையை பொதுவெளிக்குக் கொண்டு வந்தது. ஆனாலும், அதன் புனிதத்தை எப்படியாவது கட்டிக்காக்க வேண்டிய தேவை சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு இருந்தது. இந்நெருக்கடியைத் திசைமாற்றத் தமிழருக்கு எதிரான இனத்துவேசம் பெருமளவில் கட்டவிழ்த்து விடப்பட்டது.

பண்டாரநாயக்கவின் கொலைக்கான காரணம் வர்த்தகப் பிணக்காக இருந்தபோதும், தமிழர்களுக்கு சலுகைகளை பண்டாரநாயக்க வழங்கியதே நான் அவரைக் கொலை செய்ததற்கான காரணம் என சோமாராமா தேரர் சொன்ன வாக்குமூலம் முக்கிய இடத்தைப் பெற்றது. இலங்கை அடுத்த அரைநூற்றாண்டு கால அரசியலின் தீர்மானகரமான குரலாக அது ஒலித்தது. அது இயல்பாக நடந்த ஒன்றல்ல. திட்டமிட்டுக் கட்டி வளர்க்கப்பட்ட ஒன்று.

பண்டாரநாயக்காவின் எதிர்பாராத இறப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் வெற்றிடத்தையும் நெருக்கடியையும் உருவாக்கியது. அடுத்த நிலையிலிருந்த சி.பி.டி.சில்வா மருத்துவத்திற்காக இங்கிலாந்து சென்றிருந்தார். பண்டாரநாயக்க கொல்லப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் சி.பி.டி.சில்வா விஷமிடப்பட்ட பாலை உட்கொண்டதால் சுகவீனமானார். இப்பால் உண்மையில் பிரதமர் பண்டாரநாயக்கவுக்கானது என்றும் இதைத் தற்செயலாகவே சி.பி.டி.சில்வா அருந்தினார் என்பதும் இன்னொரு கதை. பண்டாரநாயக்க கொலையோடு தொடர்புடைய பல அவிழாத மர்மங்களில் இதுவும் ஒன்று.

பண்டாரநாயக்கவுக்கு அடுத்த நிலையிலிருந்த சி.பி.டி.சில்வா நாட்டில் இல்லாமையால் டபிள்யூ.தகநாயக்க இடைக்காலப் பிரதமரானார். இவர் தனக்கு எதிரானவர்களைப் பதவியிலிருந்து அகற்றி தனக்கான புதிய அமைச்சரவையை நிறுவினார். பின்னர் பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல்களை அறிவித்தார். இன்று கட்சி தாவுகின்ற அரசியல்வாதிகளுக்கு தகநாயக்க முன்னோடி.

1960ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மையான ஆசனங்களைப் பெற்றாலும் அது ஆட்சியமைக்கப் போதுமானதாக இருக்கவில்லை. 15 ஆசனங்களை வென்ற தமிழரசுக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்க ஐக்கிய தேசியக் கட்சி முயன்றது. தமிழ்க் காங்கிரசுடனான ஐக்கிய தேசியக் கட்சியின் நெருக்கம், ஐக்கிய தேசியக் கட்சி குறித்த அவநம்பிக்கை ஆகிய காரணங்களால் ஆட்சியில் பங்கேற்கத் தமிழரசுக் கட்சி மறுத்துவிட்டது. 1958 கலவரத்தின் மீதான பழி பண்டாரநாயக்கவையே சேர்ந்தாலும் அதில் ஐக்கிய தேசியக் கட்சிக் காடையர்களின் பங்களிப்பு முக்கியமானது என்பதை தமிழரசுக் கட்சி அறிந்திருந்தது. பெரும்பான்மை இல்லாத நிலையிலும் ஆளுநர் நாயகம் ஒலிவர் குணதிலக்க ஆட்சியமைக்க அழைத்தார். சிம்மாசன உரையில் அரசாங்கம் தோல்வியடைந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டுத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டன.

இடைக்கால நிர்வாகத்தை நடாத்திய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இரண்டு சலுகைகளை அறிவித்தது. முதலாவது, அரிசியை மானிய விலையில் விற்பனை செய்வது. இது தேர்தல்களில் மக்கள் ஆதரவைப் பெறுவதற்கான உத்தி. இரண்டாவது, பஸ்களில் மகளுருமாருக்கென தனியான இருக்கைகள் ஒதுக்கப்படும் என்ற அறிவிப்பு. இக்காலத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கோ, கைக்குழந்தைகளுடன் பயணிப்போருக்கோ, ஊனமுற்றோருக்கோ, வயது மூப்படைந்தோருக்கோ தனியான இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழரசுக் கட்சி தன்னுடன் கூட்டரசாங்கம் அமைக்க இணங்காததாலும் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான வலுவான கூட்டணியில் தமிழரசுக் கட்சி பங்கேற்கலாம் என்ற அச்சத்திலும் மிக மோசமான இனவாதப் பிரசாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்தது. தேர்தலுக்கு அண்மையாக இலங்கையை இரண்டாகப் பிரித்து வடக்குக் கிழக்கைத் தமிழருக்குக் கட்சியிடம் கையளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடன்பட்டுள்ளது என்ற விசமத்தனமான பிரச்சாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்தது. இது சிங்கள சமூகத்தில் நாட்டை இரண்டாகப் பிரிக்கவே தமிழர்கள் முயல்கிறார்கள் என்ற ஆழமான விதையைத் தூவியது.

தகநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று தனியாகக் கட்சி தொடங்கினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்த சி.பி.டி.சில்வா பாரிய நெருக்கடிகளைக் கட்சிக்குள் எதிர்நோக்கினார். இதனால் பண்டாரநாயக்கவின் துணைவியாரான சிறிமாவோ பண்டாரநாயக்கவை அரசியலுக்கு அழைத்து வருவது நிகழ்ந்தது. இந்த முடிவில் இரண்டு விடயங்கள் செல்வாக்குச் செலுத்தின. முதலாவது பண்டாரநாயக்கவின் கொலையை முன்வைத்து அனுதாப வாக்குகளைப் பெற சிறிமாவோ முக்கிய காரணியாக இருப்பார் என்ற கணிப்பு. இரண்டாவது, சிறிமாவோ தலைமையை ஏற்றால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி கொவிகம வெள்ளாளரிடமே தொடர்ந்து இருக்கும். குறிப்பாக சலாகம சமூகத்தைச் சேர்ந்த சி.பி. டி.சில்வாவைத் தலைவராக ஏற்க கொவிகம மேட்டுக்குடியினரோ ஏனைய செல்வாக்குள்ள பிற சிறுபான்மைச் சாதியினரும் தயாராக இருக்கவில்லை. தேர்தல் அரசியலில் சாதி வகித்த தவிர்க்கவியலாத பங்கு சி.பி. டி.சில்வாவை ஓரங்கட்டுவதிலும் சிறிமாவோ பண்டாரநாயக்கவை கொண்டுவருவதிலும் முக்கிய பங்களித்தது.

தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெற்று ஆட்சியமைத்தது. ஆனால், மிகவும் முக்கியமான இதற்கு முந்தைய தேர்தலில் 27.6 மூமான வாக்குகளைப் பெற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சி இத்தேர்தலில் 37.5 மூமான வாக்குகளைப் பெற்றிருந்தது. இந்த வாக்கு அதிகரிப்புக்கான காரணங்கள் இரண்டு.

1. ஐக்கிய தேசியக் கட்சி தனது இனவாதப் பிரசாரத்தை அதிகரித்திருந்தமை

2. மானிய விலை அரசி என்ற சலுகையை வழங்கியமை

இது இலங்கை அரசியலின் முக்கியமான ஒரு அம்சமாகும். இலங்கையில் தேர்தலை மையப்படுத்திய சலுகை அரசியலைத் தொடக்கி வைத்தது ஐக்கிய தேசியக் கட்சியே. அதேபோல சிங்கள மக்களின் வாக்குகளுக்கு இனவாதம் பேசுவது பலனளிக்கும் என்று அரசியல் கட்சிகள் கற்றுக்கொண்டதும் இந்தத் தேர்தலிலேயே.

எவ்வித அரசியல் அனுபவமும் அற்றவரான பண்டாரநாயக்க தேர்தலில் போட்டியிடவில்லை. ஆனால், அவரது தலைமைத்துவத்தின் கீழேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிட்டது.

சிறிமாவோ மூதவை (செனட்) உறுப்பினராகவே பாராளுமன்றம் சென்று பிரதமராகி உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றார். வேறொரு பாராளுமன்ற உறுப்பினரைப் பதவி விலக வைத்து, அவ்விடத்துக்குப் போட்டியிட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவராக சிறிமாவோ வருவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தேர்தலில் போட்டியிடாமலே தெரிவான பிரதமராகவே 1965 வரை அவர் இருந்தார். உலகின் முதலாவது பெண் பிரதமர் மக்களால் தெரிவுசெய்யப்படாதவர் என்பது பேசப்படுவதில்லை.

இனவாதம் முக்கிய அரசியல் கருவியாக மாறிய நிலையில், அரசின் அன்றாட அலுவல்களிலும் திட்டமிடலிலும் இனவாதம் மெதுவாக வேர்விடத் தொடங்கியது. இதற்கு சிறந்த உதாரணம் 1961இல் பிரித்தானியப் பல்கலைக்கழகத்தில் கற்பதற்கான அரசின் விஞ்ஞானப் புலமைப் பரிசிலானது அதற்கு தகுதியானவரும் கொழும்புப் பல்கலைக்கழகத் தேர்வில் முதல் மாணாக்கருமான கணேசர் சண்முகத்திற்கு வழங்கப்படாமல் வி.கே.சமரநாயக்கவுக்கு வழங்கப்பட்டது. ஆனால், இதற்கு சண்முகமே தகுதியானவர் என்று சொல்லி அப்புலமைப்பரிசிலை ஏற்க வி.கே.சமரநாயக்க மறுத்துவிட்டார். பின்னர் சண்முகத்தின் வற்புறுத்தலினாலேயே சமரநாயக்க அப்புலமைப்பரிசிலை ஏற்றுக் கொண்டார். இவரே இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்தின் தந்தை என அறியப்படுபவர். கணேசர் சண்முகம் உலகின் நன்கறியப்பட்ட வானியல் இயற்பியலாளரானார். இவரது சூரியனைச் சுற்றும் சிறுகோள்கள் பற்றிய ஆய்வுகள் முக்கியமானவை. இதனாலேயே ஒரு சிறுகோளுக்கு 16107 Chanmugam என்று பெயரிடப்பட்டது. இந்நிகழ்வு பல்கலைக்கழகங்களுக்குள்ளும் இனவாதம் புகுந்து கொண்டதை எடுத்துக்காட்டியது.

டிசம்பர் 31,1960இல், சிங்களத்தை நாட்டின் ஒரே ஆட்சி மொழியாக மாற்றும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு, மறுநாள் அது நடைமுறைப்படுத்தப்பட்டது. சிங்களம் மட்டுமே உத்தியோகபூர்வ மொழியாக இருப்பதால், அரசாங்க ஊழியர்கள் சிங்களம் தெரிந்திருக்க வேண்டும் அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் கற்றுக் கொள்ள வேண்டும். இக்கொள்கை தமிழர்களுக்குக் கடுமையான அடியாக அமைந்தது. அவர்களுக்கு அரச சேவையே முக்கிய வேலைவாய்ப்பாக இருந்தது. 1956இல், நிர்வாக சேவைகளில் 30 சதவீத வேலைகளை தமிழர்கள் வகித்தனர். 1975ஆம் ஆண்டளவில், அந்த எண்ணிக்கை 5 சதவீதமாகக் குறைந்தது. இந்த நடவடிக்கைக்கு எதிராக வெற்றிகரமான போராட்டங்களை தமிழ் அரசியல் தலைவர்களால் முன்னெடுக்க முடியவில்லை.

# 10 வருட பூர்த்தியில் SLT-MOBITEL mCash

2013ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது முதல், தேசிய மொபைல் பணச் சேவை வழங்குநரான mCash, இலங்கையில் டிஜிட்டல் கொடுப்பனவு முறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றியிருந்ததுடன், பணப்புழக்கமில்லாத எதிர்காலத்தை நோக்கி இலங்கையை கொண்டு செல்வதில் முக்கிய பங்காற்றியிருந்தது. இந்த ஆண்டு, SLT-MOBITEL இன் முன்னணி மொபைல் நிதிச் சேவைகள் கட்டமைப்பான mCash, தனது 10 வருட புத்தாக்கமான செயற்பாடுகளின் பூர்த்தியை கொண்டாடுகின்றது. தெற்காசியாவில் துரிதமாக மேம்பட்டுவரும் நிதித் தொழில்நுட்ப பகுதியாக அமைந்திருக்கச் செய்வதில் இலங்கையை மாற்றியமைக்கும் பணிகளை முன்னெடுத்திருந்தது.




நிதித் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவுகள் தொழிற்துறையில் mCash முன்னணியில் திகழ்வதுடன், தொடர்ச்சியாக மேம்பட்டு, நவீன தீர்வுகளை அறிமுகம் செய்வதில் முன்னிலையில் திகழ்கின்றது. மொபைல் பண வாடிக்கையாளர் வொலட்கள், கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் வசூலிப்புகள் நிர்வாக தீர்வுகள், கொடுப்பனவு கேட்வே சேவைகள், LankaQR கொடுப்பனவு தீர்வுகள், முகவர் வங்கிச் சேவை, உள்ளக பண ரெமிட்டன்ஸ் சேவை மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட நிதிச் சேவைகள் போன்றன அடங்கலாக டிஜிட்டல் கொடுப்பனவு சந்தையில் ஆதிக்கம் செலுத்தும் தீர்வாக mCash தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

mCash துரித வளர்ச்சி தொடர்பான தனது பயணத்தில், நாட்டில் காணப்படும் மொபைல் பணப் புழக்கத்தில் 58% ஐ தன்வசம் கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 100க்கு அதிகமான கட்டணப் பட்டியல் கொடுப்பனவு பங்காளர்கள் மற்றும் நாளிகை வலையமைப்பு பங்காளர்களை mCash கொண்டுள்ளதுடன், டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்களுக்காக துரித கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.

இன்று, இலங்கையர்களின் வாழ்க்கையில் பிரிக்க முடியாத அங்கமாக mCash மாற்றம் பெற்றுள்ளதுடன், 5 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களை பதிவு செய்துள்ளதுடன், 1 மில்லியனுக்கு அதிகமான கொடுக்கல் வாங்கல்களை தனது 30,000+ அதிகமான முகவர் வலையமைப்பினூடாகவும் தொடுகை பகுதிகளினூடாகவும் கையாள்கின்றது. இதில், விற்பனை, சுப்பர்மார்க்கெட் பகுதிகள், விற்பனை நிலையங்கள், மற்றும் டிஜிட்டல் பங்காளர்கள் போன்றன அடங்குகின்றன. இலங்கையின் பணப் புழக்கமில்லாத பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதில் mCash முன்னிலையில் திகழ்ந்தது. QR கொடுப்பனவு திட்டத்தை முன்னெடுத்திருந்ததுடன், நாடு முழுவதையும் சேர்ந்த சிறிய விற்பனையாளர்களுக்கு இது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது. தனது நாளிகைகளில் தேசிய LankaQR கொடுப்பனவு திட்டத்தை வழங்கும் அங்கிகாரம் பெற்ற சேவை வழங்குநர் எனும் வகையில், mCash தொடர்ந்தும் QR பின்பற்றலை பேணுவதுடன், 50,000+ QR கொடுக்கல் வாங்கல்களை மாதாந்தம் கையாள்கின்றது. QR கொடுப்பனவுகள் போன்ற பணப் புழக்கமில்லாத தீர்வுகளை வழங்கும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சிறியளவு முதல் பாரியளவு விற்பனை நிலையங்கள் பயன்பெறுகின்றன.

முக்கியமாக, வங்கிச் சேவைகளை பயன்படுத்தியிருக்காதவர்களை அவற்றை பயன்படுத்தும் வாய்ப்பை mCash ஏற்படுத்தியிருந்ததுடன், இந்த முக்கியத்துவம் வாய்ந்த பிரிவுக்கு முதன் முறையாக நிதிச் சேவைகளை அணுகும் வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தது. எந்த மொபைல் வலையமைப்பாக இருந்தாலும், அடிப்படை வங்கிச் சேவைகளைப் பெற்றுக் கொடுத்து, வங்கிகள் மற்றும் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு இடையிலான இடையீட்டாளராக இந்த கட்டமைப்பு அமைந்துள்ளது.

மேலும், சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற பணப் பரிமாற்ற சேவைகள் வழங்குநர்களுடன் mCash கைகோர்த்து குறைந்த செலவில் உள்ளக பண அனுப்புகை சேவைகளை வழங்கி பணத்தை அனுப்புவோருக்கும், பெறுவோருக்கும் பயனளிக்கின்றது.

வாடிக்கையாளர் சௌகரியத்தை விரிவாக்கம் செய்து, அதன் வங்கிப் பங்காளர்களுடனான பங்காண்மையின் அடிப்படையில் mCash இனால், இணைய கொடுப்பனவு கேட்வே தீர்வுகளையும், point-of-sale கொடுப்பனவு தீர்வுகளை (POS) விற்பனை நிலையங்களுக்கும், Visa மற்றும் MasterCard போன்றன அடங்கலாக சர்வதேச கார்ட் வலையமைப்புகளிடமிருந்து கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்வதையும் வழங்குகின்றது.

டிஜிட்டல் உள்ளடக்கத்தை ஊக்குவிப்பதில் இந்த mCash கட்டமைப்பு கடந்த தசாப்த காலத்தில் தன்னை அர்ப்பணித்திருந்தது. தொழில்நுட்பம், நம்பிக்கை, தங்கியிருக்கும் திறன் மற்றும் வாடிக்கையாளர் அனுபவம் ஆகியவற்றில் புதிய நியமங்களை ஏற்படுத்தியிருந்த mCash, டிஜிட்டல் கொடுப்பனவு புத்தாக்கத்தில் அடுத்த கட்டத்தை அறிமுகம் செய்து, அதிகளவு இணைக்கப்பட்ட, மதிநுட்பமான மற்றும் பணப்புழக்கமில்லாத இலங்கையை நோக்கி நகரச் செய்வதில் முக்கிய பங்காற்றும். சர்வதேச டிஜிட்டல் கொடுப்பனவு கட்டமைப்புகளில் எதிர்காலத்துக்கு உகந்த தீர்வாக வியாபாரங்கள் மற்றும் ஆரம்ப நிலை சமூகங்களுக்கு mCash உடன் இணைந்து கொள்ளுமாறு அழைக்கின்றது.

# ஹேமாஸ் லண்டன் Hoppers உடன் கைகோர்த்து முன்பள்ளி ஸ்தாபிப்பு

ஹேமாஸ் அவுட்ரீச் மையம் (HOF), லண்டனில் இயங்கும் இலங்கையின் உணவுக் குழுமமான 'Hoppers London'உடன் கைகோர்த்து, "Feed the Future"எனும் தமது திட்டத்தை நீடித்து, தெரிவு செய்யப்பட்ட பியவர முன்பள்ளிகளில் காணப்படும் மந்தபோஷணையான சிறுவர்களின் போஷாக்கு தேவைகளை நிவர்த்தி செய்ய முன்வந்துள்ளது.



2022ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியுடன் இந்த பங்காண்மை ஏற்படுத்தப்பட்டதுடன், 2023ஆம் ஆண்டில் முக்கியத்துவம் வாய்ந்த 64ஆவது பியவர முன்பள்ளியை கண்டி, பூஜாபிட்டிய கிராமத்தில் நிறுவியிருந்தது. தேவையுள்ள சிறுவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான Hoppers இன் அர்ப்பணிப்பு இந்தத் திட்டத்தினூடாக பிரதிபலிக்கப்பட்டுள்ளது. ஹேமாஸ் உடன் இணைந்து பியவர முன்பள்ளிகளுக்கு மேலும் உதவிகளை வழங்கும் திட்டத்தையும் கொண்டுள்ளது.

ஹேமாஸ் அவுட்ரீச் மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஷிரோமி மசகொரல குறிப்பிடுகையில், "Hoppers லண்டன் உடன் கொண்டுள்ள பங்காண்மை தொடர்பில் பெருமை கொள்கின்றோம். இலங்கையின் குறைந்த வசதிகள் படைத்த சிறுவர்களின் நலன்புரிச் செயற்பாடுகளில் அவர்கள் காண்பிக்கும் செயற்பாடுகள் வரவேற்கத்தக்கது. 2022இல், இந்தத் திட்டத்தினூடாக முன்னெடுக்கப்பட்ட உலர் உணவுப் பொருட்கள் பகிர்ந்தளிப்பினூடாக ஆறு மாவட்டங்களில் 15 தெரிவு செய்யப்பட்ட பியவர முன்பள்ளிகளின் 367 சிறுவர்கள் மற்றும் குடும்பங்கள் பயன்பெற்றிருந்தனர். 2023ஆம் ஆண்டில், இந்தத் திட்டம் மேலும் வியாபிக்கப்பட்டு, 11 மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 34 முன்பள்ளிகளின் 1160 சிறுவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் ஆதரவளிக்கின்றது" என்றார்.

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடன் இணைந்து, 2002ஆம் ஆண்டு ஹேமாஸ் அவுட்ரீச் மையம் ஆரம்பிக்கப்பட்டது. நாட்டில் ஆரம்ப சிறுவர் பராமரிப்பு மற்றும் விருத்தி (ECCD) தேசிய நிகழ்ச்சி நிரல் செயற்பாடுகளுக்கு ஹேமாஸ் தொடர்ந்தும் ஆதரவளிப்பதை பிரதிபலிப்பதாக பியவர அமைந்துள்ளது.

ஹேமாஸ் அவுட்ரீச் மையத்தின் தவிசாளர் அப்பாஸ் ஈசுபாலி கருத்துத் தெரிவிக்கையில், "சகல பிள்ளைகளுக்கும் கைகொடுப்பது எனும் தேசிய தேவையை நிவர்த்தி செய்வதற்காக எம்முடன் கைகோர்த்துள்ள கரன் கோகானி மற்றும் Hoppers அணியினருக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன். அவர்களின் ஒப்பற்ற அர்ப்பணிப்பு உண்மையில் வரவேற்கத்தக்கது. தேசத்தின் அத்தியாவசிய தேவைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் நன்கொடையாளர்களுக்கு முன்வந்து இயங்கக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இலங்கையின் அதிகாரத் தரப்பினர் அவசியமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்." என்றார்.

## அச்சம் தவிர்

அடங்கிட மறு அடைக்கலம் கொடு
அறிவாய் நெறி தெரிவாய் வழி
உள்ளதை அறி உலகத்தை மதி
உடைத்திடு தடை உனக்கேது கேடு

பயத்தின் தடம் பிடித்திடும் வடம்
பயணம் நிதம் பாதைகள் விதவிதம்
ஆண்மை தவறேல் அறத்தினை மறவேல்
ஆயிரம் வேலிகள் அதற்குள் போலிகள்

நாடக உலகு நடிப்பதில் விலகு
நடப்பதை கவனி செயற்படு இனி நீ
படைத்தவன் இறைவன் நடப்பவன் மனிதன்
படைக்களப் போரே வாழ்க்கையின் ஒழுங்கு


எதற்குமே முடிவு உண்டென உணரு
ஏறியே மிதித்தால் மீறியே உதைத்திடு
உனக்கான வலிமை உன்னுடன் உள்ளது
வாழ்வது ஒருமுறை சாவதோ பலமுறை

பயத்தின் வேர்களை பருவத்திலே களைந்திடு
பதறாதே காரியம் உதவாது போய்விடும்
நம்பிக்கை வைத்திடு தைரியம் கொண்டிரு
நாளையும் வெல்வாய் அச்சத்தை
தவிர்த்திடு...



தெ.கரிதரன்
(சம்பூர் சமரன்),
திருகோணமலை.





## கலி காலம்

ஊரெல்லாம் பச்சை சிவப்பு வெள்ளை
தெருவெல்லாம் பவனிவரும் மக்கள்

அழிக்கப்பட்ட ஓர் இனத்தின் இறுதி
எச்சமாய்
எஞ்சிய பாலன் கடலூடறுத்து
காட்டினான்
அகதியாய் திரிந்த தன் மக்களுக்கு
ஆசிர்வதித்திக்கப்பட்ட தேசம் இது என

இறையின் மகவாய்
மனுக்குலத்தின் சாப
விமோசனமாய்
கன்னியொருத்திக்கு
அங்கு பிறந்தான்
அருளே உருவான
பாலகன்


தேவபுத்திரனின்
வழி ஜீவித்த
ஜனங்கள்
கொண்டாடி
மகிழ்ந்தனர் அவர்
அவதரித்த அற்புத காலங்களை
பூலோகம் எங்கும் மகிழ்ந்திருக்க

பாலையில் தேனுறும் தெய்வீக தேசம்
பச்சிளம் பாலகரின் குருதியில் குளிக்குது
மீண்டுமொரு இனத்தின் பேரவல
கொரூரம்
அரங்கேறுது பாலன் பிறந்த மண்ணில்

ஊரெல்லாம் பச்சை சிவப்பு வெள்ளை
தெருவெல்லாம் பவனிவரும் மக்கள்
பாவம், இன்று அங்கு பிறந்தால்
தேவனும் கருவிலேயே மரித்து விடுவான்



அருவி-திருகோணமலை



## பைந்தமிழின் தேர்ப்பாகன்

பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதியை போற்றுவோம்
காந்திமகான் காலத்தில் வாழ்ந்த கவி - பாட்டாலே
தீந்தமிழ் சொல்லெடுத்து அழகாய் கவி படைத்து
மாந்தர் தமை மீட்டெடுத்த
மகாகவியே

எட்டயபுரத்தெழுந்த துடிப்புள்ள கவிஞராய்
நாட்டுக்குழைத்த பாட்டுக்கொரு புலவனின் படைப்புகளை
தொட்டுப் படித்திட்டால் தோள்கள் நிமிர்ந்து நிற்கும்
முட்டி மோதும் எதிரியும் ஓடி ஒழிவான்

இங்கிதமாய் எங்கும் பைந்தமிழ் கரைபுரண்டோடும்
நெஞ்சில் வீரம் நிறைந்து நீதி தழைக்கும்
கொஞ்சும் தமிழ் கூடி விளையாடும்
பிஞ்சுக் குழந்தையும் அவர் கவிதைக்குள் தஞ்சமாகும்

பூசுரனாய் பிறந்து பூநூலைத் துறந்து
மீசை வளர்த்து வெற்றிநடைபோட்டு
பாசி படிந்த பழங்கால கொள்கையிலேயே
ஊறிக் கிடந்தவர்களை
பேசவைத்து மடமைத்தனமெல்லாம்
அகன்றிடச் செய்த பாரதியே உனைப்
பணிகின்றேன்



சம்பூரணி
சுஜந்தினி யுவராஜா



## உன்னோடு கலந்தேன்


மழையில் நனைந்து
போயிருந்த சூரியன்
வானத்தின் ஓரத்தில்
எங்கோ
ஒதுங்கி கிடந்தது....

கடலில் குளித்து
வந்த
மேகப்பெண்கள்
மேலாடைகளை
பூமியின் மீது
பிழிந்து உதறி
உலர்த்தி
கொண்டிருந்தன
மழைத்துளிகளாக....

இடியும் மின்னலும்
தங்களின் காட்சிகளை
ரத்து செய்திருந்தன
வான அரங்கினில்...

குடைகளை பிடித்து
உலவிக்கொண்டிருந்தனர்
எல்லோரும் ...
தண்ணீருக்கு ஏங்கி
தவித்த பூமியில்
மழைத்துளிகளுக்கு
பயந்து...

முழுவதுமாக
சட்டை கையை மடித்துவிட்டு
குளித்து கொண்டிருந்த
என்னிரு கைகள் மீது
விழுந்து கிடந்தது
வானம்..
பிம்பமாக...
மழைத்துளிகளுடன் நான்





திருமலை சபீனா

புதுடெல்லி

# 8 பேர் பணியிடை நீக்கம்

மக்களவையில் பாதுகாப்பு குறைபாடு காரணமாக இருவர் அத்துமீறி புகைக் குப்பிகளை வீசிய சம்பவத்தில் 8 பாதுகாப்பு அதிகாரிகளை இந்திய மக்களவை செயலகம் இடைநீக்கம் செய்துள்ளது.

இந்திய மக்களவையில் புதன்கிழமை (13) பார்வையாளர்கள் கலரியில் இருந்த இரண்டு இளைஞர்கள் எம்.பிக்கள் அமரும் பகுதிக்குள் புகைக் குப்பிகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதேபோன்று பாராளுமன்றத்திற்கு வெளியேயும் புகைக் குப்பிகளை வீசி பெண் உட்பட இருவர் தாக்குதல் நடத்தினர்.

இவர்கள் 4 பேரையும் பாதுகாப்புப் படையினர் கைது செய்து புதுடெல்லி பொலிஸிடம் ஒப்படைந்தனர்.

பாராளுமன்றம் மீதான பயங்கரவாதத் தாக்குதலின் 22ஆம் ஆண்டு நினைவு தினத்தில் நடந்த இந்தத் தாக்குதல் திட்டத்தை 6 நண்பர்கள் இணைந்து செயல்படுத்தியது பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

பல கட்ட சோதனைகளை கடந்து மக்களவைக்குள் புகைக் குப்பிகளை இருவர் கொண்டு வந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மக்களவைச் செயலகம் நடத்திய முதல்கட்ட விசாரணையில், பாதுகாப்பு குறைபாட்டுக்கு காரணமாக இருந்த 8 அதிகாரிகளை இடைநீக்கம் செய்ய உத்தரவிட்டுள்ளது.





கேரளா

## கேரளாவை மிரட்டும் கொரோனா

கேரள மாநிலத்தில் மீண்டும் கொரோனா பாதிப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. கடந்த சில நாட்களாக ஒற்றை இலக்கத்தில் பதிவான தினசரி பாதிப்பு எண்ணிக்கை, தற்போது 3 இலக்கத்தை எட்டியுள்ளது.

கேரளாவில் கடந்த 10 நாட்களில் 3 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர். மேலும், கடந்த 24 மணி நேரத்தில் கேரளாவில் 230 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு மொத்த பாதிப்பு எண்ணிக்கை 949ஆக அதிகரித்துள்ளது. தொற்று பரவலை கட்டுப்படுத்த மாநில அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மத்தியப் பிரதேசம்

## இறைச்சி, முட்டை விற்க தடை



உணவு பாதுகாப்பு விதிமுறையின் கீழ், மத்திய பிரதேசத்தில் திறந்த வெளியில் இறைச்சி, முட்டை விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

மத்தியப் பிரதேச மாநில முதல்வராக மோகன் யாதவ் பதவி ஏற்ற நிலையில், அம்மாநிலத்தில் உணவு பாதுகாப்பு விதிமுறையின் கீழ் திறந்த வெளியில் இறைச்சி, முட்டை விற்பனை செய்ய தடை விதித்துள்ளார். மேலும், இந்த தடை உத்தரவு டிசம்பர் 15ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்

## "சர்வதேச ஆதரவு இல்லாவிட்டாலும் போர் தொடரும்"

இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதால், ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் போர் பிரகடனம் செய்து, காசா மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

போரை நிறுத்துமாறு ஐ.நா. மற்றும் உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றது. இந்நிலையில் "சர்வதேச நாடுகள் ஆதரவோடு அல்லது ஆதரவு இல்லாவிட்டாலும் போர் தொடரும்" என இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் எலி கோஹன் தெரிவித்துள்ளார்.



மேலும், "தற்போதைய நிலையில் போர் நிறுத்தம் ஹமாஸ் பயங்கரவாத அமைப்பினருக்கு பரிசு (gift) போன்று அமைந்துவிடும். திரும்ப வந்து இஸ்ரேல் மக்களுக்கு மிரட்டல் கொடுக்க அனுமதித்துவிடும்" என்றும் கூறியுள்ளார்.



அமெரிக்கா

## "கூடுதல் நிதி வேண்டும்"

உக்ரைன் நேட்டோ அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாடு மீது ரஷ்யா போர் தொடுத்தது. கிட்டத்தட்ட 2 ஆண்டுகளாக நீடித்து வரும் இந்த போரில் உக்ரைனுக்கு ஆதரவாக இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் இராணுவ உதவி, பொருளாதார ரீதியாக உதவி வருகிறார்கள். குறிப்பாக அமெரிக்கா, இதுவரை 111 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை நிதி உதவி செய்திருக்கிறது.

எனினும், தனது கட்டுப்பாட்டுக்குள் உக்ரைனை கொண்டுவர ரஷ்யா தீவிரம் காட்டி வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி அமெரிக்கா வந்தார். அமெரிக்க பாராளுமன்றத்தில் எம்.பிக்கள் முன்னிலையில் உரையாட விளாடிமிர், ஜெலன்ஸ்கிக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. அப்போது பேசிய ஜெலன்ஸ்கி, "2 ஆண்டுகளாக போர் தொடர்ந்து கொண்டிருக்கிறது. 2ஆம் உலக போருக்கு பின் மிக நீண்ட போரில் சுதந்திரத்திற்காக தொடர்ந்து போராடி வருகிறோம்" என்றார். மேலும், உக்ரைனுக்கு கூடுதல் நிதி உதவியையும் கோரினார்.

ரோம்

## "கல்லறைக்கான இடம் தெரிவு செய்து விட்டேன்"



போப் பிரான்சிஸ் அவருடைய கல்லறையை தெரிவு செய்திருக்கிறார். ஆனால் அது, இதற்கு முன் போப் பதவி வகித்தவர்கள் அடக்கம் செய்யப்பட்ட வத்திக்கான் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்கா அல்ல. 87 வயதுடைய பிரான்சிஸ், ரோம் நகரில் உள்ள சான்டா மரியா மேகியோர் பசிலிக்காவில் தன்னுடைய உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என விரும்புகிறேன் என்று வியாழக்கிழமை (14) வெளியான பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

இதனால், நூறாண்டுகளுக்கு பின் வத்திக்கான் நகருக்கு வெளியே அடக்கம் செய்யப்படும் முதல் போப் ஆகிறார். கடந்த 1903ஆம் ஆண்டு செயின்ட் பீட்டர்ஸ் தவிர்த்து வேறிடத்தில் அடக்கம் செய்யப்பட்டவர் போப் லியோ 8 (Pope Leo VIII) ஆவார். அவருடைய உடல் ரோமில் உள்ள செயின்ட் ஜான் பசிலிக்காவில் அடக்கம் செய்யப்பட்டது.

போப் ஆவதற்கு முன்பு, ரோம் நகருக்கு பிரான்சிஸ் செல்லும்போது, ஒரு ஞாயிற்றுக்கிழமை தினத்தில் சான்டா மரியா மேகியோர் பசிலிக்காவுக்கு செல்வது வழக்கம்.



### கொழும்பு சாஹிராவை வென்று

# சம்பியனானது ஏறாவூர் அலிகார்

■ அஸ்ஹர் இப்றாஹீம்

அகில இலங்கை ரீதியிலான 20 வயதுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான பிரிவு ஒன்று கால்பந்தாட்டத் தொடரில் ஏறாவூர் அலிகார் தேசிய கல்லூரி சம்பியனானது.

அண்மையில் நடைபெற்ற தொடரின் இறுதிப் போட்டியில் கொழும்பு சாஹிராக் கல்லூரியை 5 - 4 என்ற கோல் கணக்கில் வென்றே ஏறாவூர் அலிகார் சம்பியனானது.

## இலங்கையணியின் தேர்வாளர்களாக தரங்க, மெண்டிஸ்

இலங்கை கிரிக்கெட் சபையின் தேர்வாளர் குழுத் தலைவராக இலங்கையணியின் முன்னாள் தலைவரான உபுல் தரங்க நியமிக்கப்பட்டுள்ளதாக சபை உறுதிப்படுத்தியுள்ளது.

அஜந்த மென்டிஸ், இந்திக டி சேரம், தரங்க பரணவிதான, டில்ருவான் பெரேராவை உள்ளடக்கிய ஐவர் கொண்ட தேர்வாளர் குழுவுக்கு தரங்க தலைமை தாங்கவுள்ளார்.

இக்குழு தமது முதலாவது பணியாக சிம்பாப்வேக்கெதிரான தொடருக்கான அணியைத் தெரிவு செய்யவுள்ளது. 2 ஆண்டுகளுக்கு இத்தேர்வுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.



பிரமோதய விக்ரமசிங்க தலைமை யிலான தேர்வுக் குழுவை சபை விரும்பிய போதும் விளையாட்டமைச்சர் ஹரின் பெர்ணாண்டோ புதுமுகங்களை தெரிவு செய்துள்ளார்.




### கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் சம்பியன் கிண்ணத்தை

## சுவீகரித்த நிதி, முகாமைத்துவ பீடம்

■ அஸ்ஹர் இப்றாஹீம்

கொழும்பு பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களின் பீடங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் மற்றும் பெருவிளையாட்டுக்களில் அதி கூடுதலான புள்ளிகளைப் பெற்று உபவேந்தர் சம்பியன் கிண்ணத்தை நிதி மற்றும் முகாமைத்துவ பீடம் சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வுகளில் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் சேர்ந்த 1,000 மாணவர்கள் 39 போட்டி நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### சம்பியன்ஸ் லீக்:

## அன்ட்வெர்ப்பிடம் தோற்ற பார்சிலோனா



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், பெல்ஜியக் கழகமான றோயல் அன்ட்வெர்ப்பின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா தோற்றது.

இதேவேளை, ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. இதையடுத்து விலகல் முறையிலான சுற்றுக்கு பரிஸ் ஸா ஜெர்மைன் தகுதி பெற்றது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான லேஸியோவுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட் வென்றது.

### அரச சேவையாளர்களுக்கிடையிலான கிரிக்கெட் தொடர்:

## வெற்றிவாகை சூடிய சப்ரகமுவ மாகாண சபை

■ சிவாணி ஸ்ரீ



அபிவிருத்தி லொத்தர் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரச சேவையாளர்களுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில் சப்ரகமுவ மாகாண சபை சம்பியனாக வெற்றிவாகை சூடியது.

மொத்தமாக 50 அரச நிறுவனங்கள் பங்குபற்றிய இத்தொடரின் இறுதிப் போட்டியில் கிருலப்பன பொலிஸ் அணியை வென்றே சப்ரகமுவ மாகாண சபை சம்பியனாக வெற்றிவாகை சூடியது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 15 டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.